## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
## பல்கலைக்கழக அனுமதி – கல்வியாண்டு 2015/2016

*www.ugc.ac.lk*

### பல்கலைக்கழக அனுமதி தொடர்பான முக்கிய தகவல்கள்

1. கலைப் பிரிவில் கற்கைநெறிகளுக்கு மாணவர்களின் தெரிவு பிரதானமாக தீவளாவிய திறமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

2. வணிகப் பிரிவு, உயிரியல் விஞ்ஞானப் பிரிவு, பௌதிக விஞ்ஞானப் பிரிவு, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொறியியல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவுகள் போன்ற ஏனைய சகல பிரிவுகளுக்குமான அனுமதிகள் தீவளாவிய திறமை அடிப்படையில் 40% மும் மாவட்ட திறமை அடிப்படையில் 55% மும் மிகுதி 5% விசேட ஒதுக்கீடாக கல்வியில் பின்தங்கியதாக அடையாளம் காணப்பட்ட 16 மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்படும்.

3. ஏதேனும் பாடநெறிக்காக நீங்கள் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் (பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், வணிகம், பொறியியல் தொழில்நுட்பம், உயிரியல் முறைமை தொழில்நுட்பம்) உரிய பாடநெறிக்கு அல்லது பல்கலைக்கழகத்திற்காக மாணவர்களின் அனுமதி அவர்களுடைய திறமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

4. அனுமதிக்கான குறைந்தபட்ச பெறுபேறுகளை நீர் பெற்றிருப்பின், உமது அதிக விருப்பத்துக்குரிய கற்கைநெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் உம்மை அனுமதிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முயற்சிக்கும்.

5. குறிப்பிடப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுகையில், சகல மாணவர்களுக்கும் நியாயமான முறையில் முன்னுரிமைகளை தெரிவுசெய்வது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பெறுப்பாகும்.

6. பொதுவாக ஒரு கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதி உமது க.பொ.த. (உ/த) பாடப்பிரிவில் தங்கியுள்ளது. எனவே, மாணவர்கள் தமது பாடப்பிரிவின் அடிப்படையில் கற்கைநெறிகளை நிரற்படுத்தலாம்.

7. இருப்பினும், க.பொ.த. (உ/த) தில் உமது பாடப்பிரிவு எதுவாயினும் விண்ணப்பிக்கக்கூடிய கற்கைநெறிகளும் உள்ளன. உதாரணமாக : செயற்திட்ட முகாமைத்துவம், மொழி பெயர்ப்பு கற்கைகள், திரைப்படமும் தொலைக்காட்சி

கற்கைகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். அவ்வாறு விண்ணப்பிக்கக்கூடிய கற்கைநெறிகளின் விபரங்கள் அனுமதிக் கைநூலின் 64-82 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

8. மற்றும் முக்கியமாக சில கற்கைநெறிகளுக்கு சகல பாடப்பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களும் க.பொ.த. (உ/த) தில் குறிப்பிட்ட பாட இணைப்புகளைக் கொண்டிருப்பின் விண்ணப்பிக்கமுடியும். உதாரணமாக சட்ட கற்கைநெறி, தகவல் தொழில்நுட்ப பாடநெறி என்பவற்றைக் குறிப்பிடலாம். அவ்வாறான கற்கைநெறிகள் தொடர்பான விபரங்கள் அனுமதிக் கைநூலின் 64-82 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

9. அத்துடன் சில கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு க.பொ.த.(சா/த) தேவைப்பாடுகள் அவசியமானதாகும். உதாரணமாக சட்ட கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பதற்கு (சா/த) தில் ஆங்கிலப் பாடத்தில் C சித்தியைப் பெற்றிருத்தல் அவசியமாகும். இவ்வாறான கற்கைநெறிகள் தொடர்பான விபரங்கள் கைநூலின் பக்கம் 109 இல் தரப்பட்டுள்ளது.

10. உளச்சார்பு பரீட்சையானது சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களினால் நடாத்தப்படும். நீங்கள் உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடையவேண்டிய ஒரு கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பவராயின் தயவுசெய்து குறித்த பல்கலைக்கழக பதிவாளருடன் தொடர்புக்கொண்டு உளச்சார்பு பரீட்சை சம்பந்தமான விபரங்களை அறிந்துகொள்ளவும். உளச்சார்பு பரீட்சை சம்பந்தமாக குறித்த பல்கலைக்கழகம் பத்திரிகை அறிவித்தலொன்றை வெளியிடும். உளச்சார்பு பரீட்சை நடைபெறும் திகதி பற்றிய விபரங்களை பல்கலைக்கழக பதிவாளரைத் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம். உளச்சார்பு பரீட்சையில் சித்தியடையவேண்டிய கற்கைநெறிகளின் விபரங்கள் பக்கம் 110 இல் தரப்பட்டுள்ளது. அதனுடன் சம்மந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் தொடர்பு இலக்கங்கள் பக்கம் 212 இல் தரப்பட்டுள்ளது.

11. பின்வரும் குறிப்புகள் நீங்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதியான கற்கைநெறிகளின் பட்டியலைத் தயார்ப்படுத்திக்கொள்ள உதவும்.

12. நீர் கற்கைநெறியை தெரிவுசெய்யும்போது பல்கலைக்கழகத்தையும் மற்றும் கற்கைநெறியையும் சேர்த்தே கருத்திற்கொள்ளல் வேண்டும்.

13. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உங்கள் உயர் விருப்புரிமையின் பிரகாரம் நீங்கள் குறிப்பிட்டுள்ள கற்கைநெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் உங்களைத் தெரிவுசெய்யும். இருப்பினும் நீர் அக்கற்கைநெறிக்கு தகுதிபெற்றிருப்பதுடன் தேவையான Z புள்ளியையும் பெற்றிருத்தல் வேண்டும்.

14. நீங்கள் விண்ணப்பிக்காத ஒரு கற்கைநெறிக்கு அல்லது பல்கலைக்கழகத்திற்கு ஒருபோதும் தெரிவு செய்யப்படமாட்டீர்கள்.

15. சகல பட்ட நெறிகளும் "Uni Codes" எனும் குறியீட்டால் அடையாளப்படுத்தப்படும்.

16. **"Uni Codes"**எனப்படுவது குறிப்பிட்ட கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்களை அடையாளம் காண்பதற்கான இலக்கங்களாகும். **"Uni Code"** கள் தொடர்பான விபரங்கள் 104-108 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன

17. **"Uni Codes"** இல் உள்ள எழுத்துக்கள் அனைத்தும் அத்தியாவசியமானவை. எனவே விண்ணங்களை நிரப்பும்போது ஒவ்வொரு எழுத்தினையும் பிழையின்றி நிரப்பவும்.

**விண்ணப்பத்தை நிரப்பும் முன்னரான படிமுறைகள்**

1. 2015/2016 கல்வியாண்டிற்கான அனுமதிக் கையேட்டினை முழுமையாக வாசிக்கவும்.

2. நீங்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதி பெறுகின்ற கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகங்களின் (**"Uni Codes"**களுடன்) பட்டியல் ஒன்றைத் தயாரிக்கவும். **"Uni Codes"** களைப் பயன்படுத்தி விண்ணப்பத்தினை நிரப்பும் முறை பக்கம் 83-84 இல் தரப்பட்டுள்ளது.

3. உமது விருப்பொழுங்கின்படி நீர் அனுமதிக்கு தகுதிபெறுகின்ற கற்கைநெறிகளை மீள ஒழுங்குபடுத்தவும்.

4. நீங்கள் விண்ணப்பிக்க விரும்பும் கற்கைநெறிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை தீர்மானிக்கவும்

5. தயவுசெய்து சென்ற ஆண்டுக்கான வெட்டுப்புள்ளியைக் கொண்டு கற்கைநெறிகளைத் தீர்மானிக்க வேண்டாம். காரணம் வெட்டுப்புள்ளிகள் வருடா வருடம் வேறுபடும். (சென்றவருட வெட்டுப்புள்ளிகள் பக்கம் 179-182 இல் தரப்பட்டுள்ளது)

6. நீங்கள் விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் பாடநெறிகளினதும் பல்கலைக்கழகங்களினதும் பட்டியலை "Uni Code" களில் மீண்டும் எழுதிக் கொள்ளவும். எல்லா எழுத்துக்களையும் சரியானதாக எழுதும் பொறுப்பு உங்களுடையது.

7. விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்யும் முன் அனுமதிக் கைநூலின் பகுதி 8 இல் இணைப்பு I இல் காணப்படும் விண்ணப்பப்படிவத்தின் பிரதியினை பூரணப்படுத்திக்கொள்ளவும்.

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு இரு வழிகள் காணப்படுகின்றன :

a) இலத்திரனியல் விண்ணப்பம்
b) கையினால் நிரப்பி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்

இலத்திரனியல் விண்ணப்ப முறையினை ப.மா.ஆ. மிகவும் சிபாரிசு செய்கிறது. இலத்திரனியல் விண்ணப்ப முறையானது எளிய, வேகமான, பாதுகாப்பான மற்றும் துல்லியமான முறையாகும். அத்துடன் உங்கள் விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமைக்கான தகவல் உங்கள் கையடக்க தொலைபேசிக்கு குறுஞ்செய்தி மூலமும் மின்னஞ்சல் மூலமும் அறிவிக்கப்படும்.

**இலத்திரனியல் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு அவசியமான தகவல்கள்**

1. இணையதளத்தில் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் போது நீங்கள் க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றும்போது பயன்படுத்திய தேசிய அடையாள அட்டையையே இலத்திரனியல் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு பயன்படுத்த வேண்டும். அதைத் தவிர உங்களால் வேறு முறையைப் பயன்படுத்தி க.பொ.த (உ/த) பரீட்சையில் உங்கள் ஆளடையாளத்தை நிரூபித்திருந்தால் இணையதளத்தினூடாக விண்ணப்பிக்க உங்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது. எனவே, நீங்கள் கையால் நிரப்பிய விண்ணப்பப் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டி நேரிடலாம்.
2. இலத்திரனியல் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு தேசிய அடையாள அட்டை இலக்கம் அவசியமானதாகும். அதனால் உங்கள் தேசிய அடையாள அட்டையை கைவசம் வைத்திருக்கவும்.
3. உங்கள் இல்லத்தில் இணையதள வசதி இருப்பின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளமான www.ugc.ac.lk எனும் இணையதளத்தின் மூலம் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.
4. உங்களுக்கு இணையதள வசதி இல்லையாயின் அருகிலுள்ள நெனசல அல்லது ICT நிலையங்களைத் தொடர்புகொண்டு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம். அந்நிலையங்களின் விலாசங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் கையேட்டின் 213-227 வரையான பக்கங்களின் தரப்பட்டுள்ளது. உமது பாடசாலையில் இணையதள வசதி இருப்பின் பாடசாலையிலும் நீங்கள் இச்சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.

5. தயவுசெய்து உங்களுக்கு மிக அருகில் உள்ள நெனசல அல்லது ICT நிலையங்களுக்கு பின்வரும் 07 ஆவணங்கயுடன் சென்று இலத்திரனியல் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.

   1. நீங்கள் ஏற்கனவே கையால் நிரப்பிய பிரதி செய்யப்பட்ட விண்ணப்பப் பத்திரம்.
   2. தேசிய அடையாள அட்டை.
   3. **கையடக்க தொலைபேசி இலக்கம்**

      முக்கியமாக உங்களால் இவ்விலத்திரனியல் விண்ணப்பத்தைச் சமர்பபிப்பதற்கு வழங்கப்படும் கையடக்க தொலைபேசி இலக்கம் உங்களால் மட்டுமே பாவிக்கப்படல் வேண்டும். பல்கலைக்கழக அனுமதிக்கு இலத்திரனியல் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் இன்னொரு மாணவரால் அதே இலக்கத்தை அதே ஆண்டு பயன்படுத்த முடியாது. இத்தொலைபேசி இலக்கத்திற்கே செயற்படுத்தல் குறியீடு (Activation Code) அனுப்பப்படும்.

   4. **செல்லுபடியான மின்னஞ்சல் முகவரி**

      சரிபாத்தல் இணைப்பு மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும்
   5. க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர பெறுபேற்று பிரதிகள்
   6. பாடசாலை அதிபரினால் அத்தாட்ச்சிப்படுத்தப்பட்ட படசாலை விடுகைப் பத்திரத்தின் மூலப்பிரதி (தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மட்டும்)

**குறிப்பு:** அத்துடன் நீர் ஒன்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்றிருப்பின் அத்துடன் உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலையில் ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதியில் கல்விகற்றிருப்பின், அல்லது இக்காலப்பகுதியில் பாடசாலையில் கல்வியைத் தொடராதிருப்பின் 01.08.2012 முதல் 31.07.2015 வரை நீர் வசித்த பிரதேசத்தின் கிராம அலுவலர் சான்றிதழ் மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் கிடைக்கப் பெறும் தேர்தல் தொகுதிஇடாப்பின் பிரித்தெடுப்புகளின் **(Extracts of Electoral Register)** மூலப்பிரதி **(Original)** (ஆண்டு 2012, 2013, 2014, 2015)

   7. உமது பெயரில் வித்தியாசங்கள் ஏதும் இருப்பின் சத்தியக்கடதாசி

6. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நெனசல மற்றும் ICT நிலையங்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குகின்றது. அதனால் இந்நிலையங்களைப் பயன்படுத்தும் மாணவர்கள் அந்நிலையங்களுக்கு பணம் செலுத்த தேவையில்லை

7. விண்ணப்பத்தை நீர் நிரப்பு முன் அல்லது நெனசல மற்றும் ICT நிலைய அதிகாரி ஒருவர் நிரப்புவதற்கு உதவி செய்யும் முன் கையேட்டின் பகுதி 3 ஐ (பக்கம் 90-122) வரையான பகுதியை நன்கு வாசிக்கவும்.

8. இணையதளத்தில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் அறிவுறுத்தல்கள் தெளிவாக தரப்பட்டுள்ளன.

9. இருப்பினும் விண்ணப்பம் ஆங்கில மொழியில் மட்டுமே நிரப்பப்படல் வேண்டும்.

### இலத்திரனியல் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான படிமுறைகள்

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளமான www.ugc.ac.lk எனும் இணையதளத்தினுள் பிரவேசிக்கவும்.
2. ஒரு பாவனையாளராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளத்தில் பதிவுசெய்துகொள்ள வேண்டும். இது தொடர்பாக தேவையான படிமுறைகள் விண்ணப்பப் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்டதன் பின்னர்
3. பதிவுசெய்ததன் பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் உள்நுழையவும். நான்கு படிமுறைகளில் இலத்திரனியல் விண்ணப்பத்தை நிரப்புதல் வேண்டும். அத்துடன் நீர் எந்த படிமுறையிலும் வெளியேறி பின்னர் உள்நுழைந்து விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.
4. படிமுறை 1 இலிருந்து விண்ணப்பத்தை நிரப்புவதற்கு ஆரம்பித்தல் வேண்டும். படிமுறை 1 உங்கள் தனிப்பட்ட தகவல்களாகும்.
5. படிமுறை 2 உங்கள் க.பொ.த. (சா/த) மற்றும் (உ/த) பரீட்சை பெறுபேறுகள் பற்றியதாகும்.
6. படிமுறை 3 உங்கள் பாடசாலை பற்றிய விபரங்களாகும்.
7. படிமுறை 4 இன்படி நீங்கள் மேற்கொள்ள விரும்பும் கற்கை நெறிகள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றை விருப்பத்திற்கேற்ப வரிசைப் படுத்தவும்.
8. இப்போது நீங்கள் சகல படிமுறைகளையும் பூர்த்திசெய்துவிட்டீர்கள். உங்களால் கொடுக்கப்பட்ட தகவல்கள் சரியானவையா என உறுதிப்படுத்தவும்.
9. தற்போது உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும்.
10. உங்கள் விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி ஒன்றைப் பெற்றுக்கொள்ளவும். பெற்றுக்கொண்ட அச்சுப்பிரதியில் உங்களால் நிரப்பப்பட்ட முறைக்கு பின்னர் ஐந்தாவது பகுதியாக விண்ணப்பதாரியின் உறுதியுரையையும், ஆறாவது பகுதியாக நீங்கள் பாடசாலை விண்ணப்பதாரியாயின் பாடசாலை அதிபரினால் நிரப்பப்பட வேண்டிய பகுதியும்,Bar Code கட்டமுள்ள பகுதியும் அச்சிடப்படும். இந்த Bar Codeகட்டம் உங்கள் விண்ணப்பப் பத்திரத்துடன் அனுப்பப்படும் ஆவணங்களின் இரண்டு பக்கமும் வெட்டி ஒட்டப்படுவதற்காகும்.

11. ஆவணங்களின் இடப்பக்க மேல் மூலையின் இரண்டு பக்கமும் உரிய Bar Code கட்டத்தினையும் வெட்டி ஒட்டவும். அனுமதி கையேட்டின் 112ஆம் பக்கம் உங்களால் விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படும் ஆவணங்களின் பட்டியல் காட்டப்பட்டுள்ளது.
12. அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் தகவல்கள், திகதி என்பவற்றை வாசித்து விண்ணப்பதாரியின் உறுதியுரை உள்ள ஐந்தாவது பகுதியில் கையொப்பமிடல் வேண்டும்.
13. அச்சுப்பிரதி செய்யப்பட்ட விண்ணப்பபடிவத்தை சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குகீழுள்ள விலாசத்திற்கு அனுப்பவும்..

14. விலாசம் : சிரேஷ்ட உதவிச் செயலாளர் / பல்கலைக்கழக அனுமதி
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
இல. 20, வோட் பிரதேசம் கொழும்பு - 7.

2015/2016 கல்வியாண்டிற்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் விண்ணப்பப் பத்திரங்களை பாரமேற்கும் கடைசித் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**முக்கிய அறிவித்தல்**

- உங்கள் இலத்திரனியல் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து, அச்சுப்பிரதியை முடிவுத்திகதிக்கு முன்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கும் பட்சத்தில் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படும்.

- நீங்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவுசெய்யப்படின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து நீங்கள் தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகம் தொடர்பான விபரங்கள் அடங்கிய கடிதம் அனுப்பப்படும். அதன் பின்னர் அப்பாடநெறியை பாரமேற்பது தொடர்பாக நீங்கள் தீர்மானிக்கலாம்.

- கற்கைநெறியை பாரமேற்க நீங்கள் தீர்மானிக்குமிடத்து இணையதளத்தை பாவித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உத்தியோகபூர்வ வெப்தளத்தினூடாக தெரிவு செய்த கற்கைநெறியையும் பல்கலைக்கழகத்தையும் பதிவு செய்துகொள்ளலாம்.

- கற்கைநெறியை பாரமேற்கவில்லை என நீங்கள் தீர்மானித்தால், அந்த கற்றைநெறியையும் பல்கலைக்கழகத்தையும் நீங்கள் பதிவுசெய்யாமல் விடலாம்.

- ஆயினும் வெற்றிடத்தை நிரப்ப உங்களால் விண்ணப்பிக்கப்பட்ட உயர் விருப்பொழுங்கிலான கற்கைநெறி, பல்கலைக்கழகத்திற்காக உங்களை தெரிவு செய்வதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. இவ்வேளையில் அக் கற்கைநெறிகளை பாரமேற்பதா இல்லையா என்பதை தீர்மானிக்கும் உரிமை உங்களுக்குண்டு.

- எவ்வாறாயினும், பதிவு செய்வதற்காக பெற்றுத்தரப்பட்ட கடைசி திகதி அல்லது அதற்கு முன்தினம் பதிவு செய்யாவிட்டால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் உங்களுடைய இடத்திற்கு திறமை அடிப்படையில் மற்றொரு மாணவரை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
20.04.2016